புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2025** **09 டிசம்பர் 2025**

# பத்திரிகை செய்தி

புதுவைப் பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழ் இலக்கியத்துறை மற்றும் வானவில் பண்பாட்டு மையம் சார்பில் மகாகவி பாரதியாரின் 144-வது பிறந்தநாள் விழா புதுவை பல்கலைக்கழகத்தில் இன்று (09.12.2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

விழாவில், பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பிரகாஷ் பாபு, வானவில் பண்பாட்டு மைய நிறுவனர் திரு ரவி, புல முதல்வர் டாக்டர் சுடலைமுத்து, ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ரவிக்குமார், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.